| Headline | TNB: 85 pct of complaints on sky high electricity bills resolved | | |
| --- | --- | --- | --- |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 14 Jun 2019 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 12 |
| ArticleSize | 150 cm² | Journalist | NULL |
| PR Value | RM 1,309 | | |
| | | | |



# மலையேறிய மின் கட்டணம் 85 விழுக்காடு புகார்களுக்கு தீர்வு



கோலாலம்பூர், ஜூன் 14-

ஏப்ரல், மே மாதங்களில் நாடு முழுவதும் மின் கட்டணம் வெகுவாக அதிகரிக்கப்பட்டது என்று பயனீட்டாளர்கள் பரவலாக புகார் தெரிவித்திருந்தனர். மின் கட்டணம் மலையேறியது என்றுதான் சொல்ல வேண்டும். ஆக மொத்தம் 18,000 புகார்களுக்கு மேல் தெரிவிக்கப்பட்டது.

டிஎன்பி என்ற தெனாகா நேஷனல் நிறுவனம் இதில் 85 விழுக்காடு புகார்களுக்கு தீர்வுகண்டது. இன்னும்தீர்வு காணப்படாமல் இருக்கும் எஞ்சிய 3,000 புகார்களுக்கு நிறுவனம் விரைவில் பரிகாரம் காணும் என்று இதன் தலைவரும் தலைமை செயல்முறை அதிகாரி அமிர் ஹம்ஸாஅஸிஸான்தெரிவித்தார். புகார்கள் சம்பந்தமான விசாரணையிலும் பரிகாரம் காணபதில் தீவிரத்தையும் நாங்கள் முதன்மை கவனம் செலுத்துகிறோம். பிரச்சினையின் உண்மையான தன்மை என்னவென்பதில் நாங்கள் எங்களின் கவனத்தை செலுத்தி வருகிறோம். எது எப்படியோ பயனீட்டாளர்கள் எதிர்நோக்கி பிரச்சினைகளுக்குரிய தீர்வு காண்பதே தங்களின் முக்கிய பணி என்றார் அமிர் ஹம்ஸா அஸிஸான்.

Powered by: iSENTIA